## மதுரை, சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கூட்டம்:

# அ.தி.மு.க.வில் பல அணிகள்...! அனைத்துக்கும் தலைமையகம் அமித்ஷா வீடு!

## சோழவந்தான் கழக ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!




மதுரை,செப்.25-

**மதுரை, சோழவந்தானில், மதுரை வடக்கு மாவட்டம், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழக நிர்வாகிகள் - அணிகள் மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகளை நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சந்தித்துக் கலந்துரையாடினார்.**

**அப்போது அவர், ``திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையகம் அண்ணா அறிவாலயத்தில் இருக்கிறது. அ.தி.மு.க-வின் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ள அமித்ஷா வீட்டில் இருக்கிறது. இன்றைக்கு அமித்ஷாவின் வீடுதான் அ.தி.மு.க-வின் தலைமை அலுவலகம்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்றைக்கு இந்த மதுரை வடக்கு மாவட்டத்திற்கு வருகை தந்து சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் உங்கள் அத்தனைபேரையும் ஒரே இடத்தில் சந்தித்து, உங்களுடன் உரையாற்றுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது.

சோழவந்தான் தொகுதிக்குப் பலமுறை வந்திருக்கிறேன். இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத் துறையின் அமைச்சராக, துணை முதலமைச்சராக பலமுறை வருகை தந்துள்ளேன். ஆனால், இன்றைக்கு ஒரு கூடுதல் சிறப்பு என்னவென்றால், உங்களை எல்லாம் சந்திக்க உங்களில் ஒருவனாக, உடன்பிறப்புளில் ஒருவனாக, தலைவர் அவர்கள் என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

### மகிழ்ச்சி நெகிழ்ச்சி

எப்படி உங்களின் முகத்தில் சிரிப்பு, மகிழ்ச்சி, அன்பு. அதே போல் எனக்கும் மகிழ்ச்சி நெகிழ்ச்சி. ஒரு மகிழ்ச்சியான விஷயம், பேசி முடித்துவிட்டு உங்கள் அத்தனை பேரோடும் தனித்தனியாக புகைப்படம் எடுப்பதற்காகவும் நான் இங்கே வருகை தந்திருக்கிறேன். ஒரேயொரு வேண்டுகோள் நீங்கள் புத்தகம், கருப்பு-சிவப்பு கரை வேட்டிகள் கொடுப்பீர்கள் நிச்சயமாக வாங்கிக்கொள்கிறேன். பூங்கொத்துகளையும், பொன்னாடைகளையும் தயவுசெய்து தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 17-ஆம் தேதிதான் கரூரில் நடந்த முப்பெரும் விழாவில், உங்களில் பல பேரை நேரில் பார்த்தேன். அங்கு எவ்வளவு எழுச்சியுடன் வந்திருந்தீர்களோ, அதே எழுச்சியுடன்தான் இங்கும் வந்திருக்கிறீர்கள். கரூரில் லட்சக்கணக்கான உடன்பிறப்புகள் திரண்ட விழாவில், கொட்டுகின்ற விழாவிலும், தலைவரின் உரையை கடைசிவரை உணர்வுடன் கேட்ட உடன்பிறப்புகள் நீங்கள்.

இந்த சோழவந்தான் தொகுதிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இது ஒன்றும் சாதாரண தொகுதி கிடையாது. ஜல்லிக்கட்டுக்குப் பெயர்போன அலங்காநல்லூர், உங்கள் தொகுதியில்தான் இருக்கிறது. பலமுறை ஜல்லிக்கட்டுக்கு வந்திருக்கிறேன். ஜல்லிக்கட்டுக்கு உலகப்புகழ் பெற்ற பாலமேடும் உங்கள் தொகுதியில்தான்இருக்கிறது.

### நெருக்கடிகள், போராட்டங்கள்

இன்றைக்கு நம் கழகம் 75-வது ஆண்டை கடந்து, பவளவிழாவை கொண்டாடி 76-வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். 76 வருடத்தில் எத்தனையோ நெருக்கடிகள், போராட்டங்களை எல்லாம் வெற்றிக்கரமாக சந்தித்த இயக்கம்தான் நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதில், நமக்கு அனைவருக்கும் பெருமை. இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் இளமையுடன், உறுதியுடன், வலிமையுடன் இருக்கிறது என்றால், அதற்கு மிக மிக முக்கியமான காரணம், இங்கு வந்திருக்கக்கூடிய கலைஞரின் உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கோட்டைக்கு அடித்தளமாக இருந்து, தாங்கிப் பிடிப்பது இங்கு வந்திருக்கின்ற ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகளாகிய நீங்கள்தான். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் நீங்கள் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர், நம் கழகத்தலைவர் கிடையாது. இந்த இயக்கத்தின் இரத்த ஓட்டமே இங்கு வந்திருக்கின்ற நீங்கள்தான்.

### மிகப்பெரிய வெற்றி

கலைஞரைப் பற்றி பேசும்போது பெருமையாகச் சொல்வோம். நின்ற அனைத்து தேர்தலிலும் வென்ற ஒரே தலைவர் கலைஞர் அவர்கள்தான். கழகம் வெற்றி வாய்ப்பை இழந்தாலும், ஆனால், கலைஞர் மட்டும் எங்கு நின்றாலும் வெற்றிப் பெற்று காட்டினார். அதுதான் கலைஞரின் பெருமை. நம் தலைவருக்கும் பெருமை உண்டு. அவர் தலைவராக பொறுப்பேற்று சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று இருக்கிறது அதற்கும் காரணம், இங்கு வந்துள்ள உடன்பிறப்புகளாகிய உங்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும்தான்.

2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் உங்களின் உழைப்பால்தான் தலைவர் அவர்கள் இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்ந்திருக்கிறார்கள். அவர் முதலமைச்சராக உட்கார்ந்து இருப்பதால்தான், இன்றைக்கு இந்தியாவே திரும்பி பார்க்கிற மாதிரி ஏராளமான நலத்திட்டங்களை, நம் மாநில மக்களுக்கு தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். சில திட்டங்களை மட்டும், உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான மகளிர் விடியல் பயண திட்டத்துக்குத்தான். இந்த நான்கரை வருடத்தில் மகளிர் 780 கோடி பயணங்களை மேற்கொண்டுள்ளார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும், 1 கோடிக்கும் அதிகமான பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

### புதுமைப்பெண் திட்டம்

அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம். குழந்தைகள் பசியோடு படிக்கக்கூடாது, நிறைந்த வயிற்றுடன் படிக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட திட்டம்தான் காலை உணவுத் திட்டம். மாணவ, மாணவிகள் பள்ளிப்படிப்பு படித்தால் மட்டும் போதாது. உயர் கல்வி படிக்க வேண்டும் என்று, அரசு பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சென்று உயர்கல்வி படித்தாலும் அவர்களுக்கு மாணவியாக இருந்தால் புதுமைப்பெண் திட்டம், மாணவனாக இருந்தால் தமிழ்ப்புதல்வன் திட்டம் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை மாணவ-மாணவிகளுக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட தமிழ்நாடு முழுவதும் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று இருக்கிறார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும் 66 ஆயிரம் மாணவ-மாணவிகள் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக பயன்பெற்று வருகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இந்தத் திட்டத்தை 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி, அண்ணா பிறந்த நாளில் நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இந்த இரண்டு வருடத்தில் கிட்டத்தட்ட 1 கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை, கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு மகளிருக்கும் 24 ஆயிரம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும் 4 லட்சத்து 55 மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். சிலருக்கு இந்தத் திட்டம் வரவில்லை என்ற குறைகளும் இருக்கின்றன.

### தாயுமானவர் திட்டம்

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களை 10,000 இடங்களில் நம் அரசு நடத்த இருக்கிறது. கிட்டத்தட்ட 80 சதவிகித முகாம்கள் நடந்து முடிந்து விட்டன. முடிந்த முகாம்களில் 60 சதவிகித பேர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்குத்தான் விண்ணப்பித்துள்ளார்கள். தலைவர் அவர்கள் அதற்கு விடுத்திருந்த விதிமுறைகளில் தளர்த்தி உள்ளார். இன்னும் இரண்டு மாதங்களில் கூடுதல் மகளிருக்கு கலைஞர் உரிமைத்தொகை திட்டம் நிச்சயமாக வழங்கப்படும்.

தாயுமானவர் திட்டம். 70 வயதுக்கு மேல் இருந்தாலும் இனிமேல் ரேசன் கடைக்கு சென்று, வரிசையில் நிற்கத் தேவையில்லை. அவர்களின் இல்லங்களுக்கே சென்று ரேசன் பொருட்களை, நம் தலைவர் அவர்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

நம்மைக் காக்கும் 48 திட்டம். சாலை விபத்தில் யாராவது காயமடைந்தால், அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான மருத்துவ செலவை அரசே ஏற்கும் என்ற திட்டத்தை அறிவித்தார். இப்படி ஏகப்பட்ட திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

நான் முதல்வன் திட்டம். மாணவர்கள் என்ன படிக்க வேண்டும், அவர்களுக்கு எதில் ஆர்வம் இருக்கிறது, அவர்கள் எந்தக் கல்லூரியில் சேர வேண்டும், படிப்பை முடித்து, அவர்கள் எந்த வேலையில் சேர வேண்டும் என்பதை சொல்லிக்கொடுக்கும் திட்டம்தான் நான் முதல்வன் திட்டம்.

இப்படி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதால், இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு நம்பர் 1 மாநிலம் என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. பொருளாதார வளர்ச்சியில் கடந்த 10 ஆண்டுகளாக பின்நோக்கி இருந்த தமிழ்நாடு, இன்றைக்கு முதன்முறையாக இரட்டை இலக்கை அடைந்துள்ளது. 11.19 சதவிகித வளர்ச்சியுடன் இன்றைக்கு இந்தியாவிலேயே அதிக வளர்ச்சி அடைந்த மாநிலமாக, நம் தமிழ்நாடு உருவாகி இருக்கிறது என்றால், அதற்கு நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திட்டங்கள்தான் காரணம்.

சோழவந்தான் தொகுதிக்கு பல திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ளார். அதில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சோழவந்தானில் புதிய பேருந்து நிலையத்தைக் கொடுத்திருப்பது நம் அரசு.

சோழவந்தான் சின்ன இலந்தைகுளத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம். அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு மைதானத்தைக் கட்டி முடித்தார் நம் தலைவர் அவர்கள். 62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் மற்றும் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டிமுடித்து இன்றைக்கு அதை மாடுபிடி விளையாட்டு வீரர்கள் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு இதே மதுரையில் மிகவும் பிரபலம். அதனால் நானும் பிரபலம். எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப் போகிறோம் என்று சொல்லி, கிட்டத்தட்ட 6 வருடம் ஆகிறது. அங்கு ஒரு கல்லை வைத்தார்கள். அதையும் நான் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். தமிழ்நாடு முழுவதும் அந்தக் கல் சிறப்பு செய்தது. இப்போதுதான் அந்தக் கட்டடத்தில் 30 சதவிகித வேலை நடத்திருக்கிறது. 6 வருடமாக அதை இன்னும் கட்டி முடிக்கவில்லை.

மதுரைக்கு ஏன் எய்ம்ஸ் மருத்துவமனை வரவிலையென்றால், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எய்ம் (நோக்கம்) மோடியிடம் இல்லை. அதனால்தான் தமிழ்நாட்டுக்கு இன்னும் எய்ம்ஸ் மருத்துவமனை வரவில்லை.

இந்த சோழவந்தான் தொகுதியில் மட்டும் 4 வருடத்தில் 4 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாவை நம் அரசு கொடுத்திருக்கிறது.

### ரூ.48 கோடியில் திட்டங்கள்

பாலமேடு பேரூராட்சியில் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை நம் அரசு செய்து கொடுத்திருக்கிறது. மண்ணடிமங்கலம், இரும்பாடி அருகே உயர்மட்ட பாலம். சோழவந்தான் பகுதி விவசாயிகளுக்காக 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்கள். மதுரை வெளிவட்ட சாலை இப்படி ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் இந்தத் தொகுதிக்குக் கொடுத்துள்ளார்.

உங்களின் மாவட்ட அமைச்சர் அண்ணன் மூர்த்தி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் அவர்களும் இன்னும் கூடுதலான திட்டங்களை, ஒவ்வொரு நாளும் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். இதையெல்லாம், நீங்கள் உள்வாங்கிக்கொண்டு மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இந்தத் திட்டங்களைப் பற்றி மக்களிடம் தொடர்ந்து பேச வேண்டும்.

நாம் இப்படி பல்வேறு நலத்திட்டங்களை, மாநிலத்தின் வளர்ச்சிக்காக செய்து வருகிறோம். ஆனால், இவையெல்லாம் பிடிக்காமல்தான் ஒன்றிய பாசிச பா.ஜ.க. நம் அரசுக்கு பல்வேறு இடையூறுகள், நெருக்கடிகளைத் தொடர்ந்து கொடுத்து வருகிறது.

### வெளிப்படையாக மிரட்டினார்

நிதியுரிமை, மொழியுரிமையை பறிக்கிறது. புதியக் கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். புதியக் கல்விக்கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் பள்ளிக் கல்வித்துறைக்குக் கொடுக்க வேண்டிய 2,500 கோடி ரூபாயைத் தருவோம் என்று ஒன்றிய அமைச்சர் வெளிப்படையாக மிரட்டினார். மற்ற மாநிலங்கள் எல்லாம் முதலில் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், நம் முதலமைச்சர், நீ புதிய கல்விக்கொள்கை மூலமாக, மீண்டும் மும்மொழிக் கொள்கையைக் கொண்டு வருகிறீர்கள். மறைமுகமாக இந்தியையும், சமஸ்கிருத்தையும் தமிழ்நாட்டுக்குள் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் ரூ.2,500 கோடி இல்லை, ரூ.10,000 கோடி கொடுத்தாலும் புதியக் கல்விக்கொள்கையை தமிழ்நாட்டு மக்களுக்கு நான் கொண்டு செல்ல மாட்டேன் என்று தைரியமாகச் சொன்னார் நம் முதலமைச்சர் அவர்கள்.

இன்று மற்ற மாநில முதலமைச்சர்கள், `தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது சரிதான்' என்று வழி மொழிகிறார்கள். சமஸ்கிருத திணிப்பு, தொகுதி மறுவரையறைக் கொண்டுவரப் பார்க்கிறார்கள் ஒன்றிய அரசு. 39 நாடாளுமன்ற தொகுதிகளை குறைத்து, 32 தொகுதியாக மாற்ற முயற்சிக்கிறார்கள்.

இப்படி எத்தனையோ வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சித்துக் கொண்டே இருக்கிறது. ஆனால், இந்த அனைத்துப் பிரச்சினைகளையும் நம்முடைய தலைவர் அவர்கள் லெப்ட் ஹேண்டில் டீல் பண்ணிவிட்டு போய்கொண்டே இருக்கிறார். அடுத்த என்ன என்று கேட்டுக்கொண்டே இருக்கிறார்.

எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்த வேண்டும். தமிழ்நாட்டை எப்படியாவது அபகரிக்க வேண்டும், சிதைக்க வேண்டும் என்று நம் இன எதிரிகள் இன்றைக்கு புதிதாக ஏதாவது முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அவர்களுக்குத் தெரியவில்லை. உங்களை மாதிரி கருப்பு-சிவப்பு துண்டு போட்ட கருப்பு-சிவப்பு வேட்டி கட்டிய கடைசித் தொண்டன் இருக்கிறவரைக்கும் தமிழ்நாட்டுக்குள் ஒன்றிய பா.ஜ.க கால் வைத்து இல்லை, எட்டிக் கூட பார்க்க முடியாது. அந்த நிலைமையை, நாம் உருவாக்கி வைத்திருக்கிறோம்.

### கடுமையான எதிர்ப்பு

இன்றைக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த இரண்டு நாட்களாக ஒரு புது நாடகத்தை அரங்கேற்றி இருக்கிறார்கள். இதை மிகவும் பெருமையாகப் பேசுகிறார்கள். அது என்னவென்றால், ஜி.எஸ்.டி வரியை நாங்கள் குறைத்துவிட்டோம். நான் கேட்கிறேன். இந்த ஜி.எஸ்.டி வரியை அதிகமாக்கியது யார். ஏற்றியதும் நீங்கள்தான். ஏற்றிய முதல் நாளிலிருந்து கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். இதனால் வணிகர்கள், பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று தொடர்ந்து, நாம் குரல் கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் இருந்து மட்டும் 55 லட்சம் கோடி அளவுக்கு, ஜி.எஸ்.டி. வரியை வசூல் செய்துள்ளார்கள்.

தமிழ்நாடு கொடுத்தது 55 லட்சம் கோடி. ஆனால், ஒவ்வொரு முறையும் நமக்கு வரவேண்டிய நிதியை, உரிமையைக் கொடுத்திருக்கிறார்களா என்றால், கொடுக்கவில்லை. இன்றைக்கு பீகாரில் தேர்தல் வருகிறது என்பதால் ஜி.எஸ்.டி வரியைக் குறைக்கிறோம் என்று பா.ஜ.க போடுகிற நாடகத்தை அ.தி.மு.க நம்பலாம். தமிழ்நாட்டு மக்கள் தெளிவானவர்கள், கடைசி வரைக்கும் அதை நம்ப போறதில்லை. இதையெல்லாம் நாம் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

நம்மிடம் கழகத்தின் கொள்கைகள், அரசின் சாதனைகள் இருக்கின்றன. அதனால்தான் இன்றைக்கு மக்களை நாம் தைரியமாக சந்திக்கிறோம்.

நம் இயக்கத்தில் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி என்று 25 அணிகள் இருக்கின்றன. ஒவ்வொரு அணியும் போட்டிப்போட்டுக்கொண்டு களத்தில் சிறப்பாக செயல்படுகின்றன. ஆனால், அ.தி.மு.க-வில் நம்மைவிட அதிகமான அணிகள் இருக்கின்றன. ஈ.பி.எஸ் அணி, டி.டி.வி அணி, ஓ.பி.எஸ் அணி, சசிகலா அணி, செங்கோட்டையன் அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபாவின் டிரைவர் அணி போன்று பல அணிகள் இருக்கின்றன.

ஐ.பி.எல் போட்டி நடக்கும் முன்பு அணிகளின் முதலாளிகள் வீரர்களை ஏலத்தில் எடுப்பார்கள். 1 கோடி, 2 கோடி என்று வீரர்கள் ஏலத்தில் எடுப்பார்கள். ஐ.பி.எல் மாதிரி இப்போது ஏ.பி.எல் வந்திருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ப்ரீமியர் லீக், ஐ.பி.எல்லுக்கு போட்டியாக இன்றைக்கு அ.தி.மு.க போட்டியை ஆரம்பித்துள்ளது. இந்த மதுரை மாவட்டத்தில் உதயகுமார் அணி, செல்லூர் ராஜு அணி, ராஜன் செல்லப்பா அணி என்று தொகுதிக்கு ஒரு அணி இன்றைக்கு அ.தி.மு.க-வில் இருக்கின்றன.

### அ.தி.மு.க – அமித்ஷா வீடு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையகம் அண்ணா அறிவாலயத்தில் இருக்கிறது. அ.தி.மு.க-வின் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ள அமித்ஷா வீட்டில் இருக்கிறது. இன்றைக்கு அமித்ஷாவின் வீடுதான் அ.தி.மு.க-வின் தலைமை அலுவலகம். நம் கட்சி உடன்பிறப்புகளுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை என்றால், மனு எழுதிகொண்டு அறிவாலயத்துக்கு வந்து தலைவரை, பொருலாளரைப் பார்ப்போம். ஆனால், அ.தி.மு.க-வில் அண்ணன் ஈ.பி.எஸ். அவர்களுக்குப் பிரச்சினை என்றால், உடனே அமித்ஷாவைப் பார்க்க டெல்லி சென்று விடுகிறார். ஓ.பி.எஸ் அவர்களுக்குப் பிரச்சினை என்றால் உடனே விமானத்தில் டெல்லிக்குச் சென்று விடுகிறார். செங்கோட்டையனுக்குப் பிரச்சினை என்றால் டெல்லிக்குச் சென்று விடுகிறார்.

அ.தி.மு.க-வை பொறுத்தவரைக்கும் அவர்களின் கட்சி மட்டும்தான் இங்கு இருக்கிறது. அவர்களின் ரிமோட் கன்ட்ரோல் முழுவதும் டெல்லியில் இருக்கிறது. டெல்லி என்ன முடிவெடுக்க வேண்டும் என்று செயல்படுபவர் நம் கழகத் தலைவர். டெல்லி சொல்வதைக் கேட்டு, முடிவெடுப்பவர்தான் எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்.

செங்கோட்டையன் மேல் ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா என்று யாராவது கேட்டால், அதை மேலிடம் பார்த்துக்கொள்ளும் என்று சொல்கிறார். பா.ஜ.க கட்சிதான் அவரின் மேலிடம். இந்திய வரலாற்றிலேயே ஒரு தேசிய கட்சிக்கு, ஒரே மாநிலத்தில் இரண்டு மாநில கிளைகள் இருக்கின்றன என்றால், அது பா.ஜ.க.வுக்குதான். ஒன்று நயினார் நாகேந்திரன் தலைமையில் இருக்கிற மாநில பா.ஜ.க. இன்னொன்று எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி தலைமையில் இருக்கின்ற அடிமை அ.தி.மு.க. இந்த இரண்டு கிளைகளும் பா.ஜ.க-வின் கிளைகள்.

ஆகவே, இப்படிப்பட்ட அ.தி.மு.க-வும், பா.ஜ.க-வும் திரும்பவும் தமிழ்நாட்டில் வரவிடாமல் நிறுத்த வேண்டிய பொறுப்பு, நிச்சயம் நம்மிடம் இருக்கிறது. அந்த துரோக கூட்டணியை நாம் வீழ்த்தியாக வேண்டும். இங்கு இருக்கின்ற ஒவ்வொருவரும் அடுத்து வருகின்ற ஒவ்வொ மணித் துளியும் உழைக்க வேண்டும்.

இங்கு பூத் கமிட்டி உறுப்பினர்கள் வந்திருக்கிறீர்கள். உங்களின் பணி மிகமிக முக்கியம். ஒரு வாக்கைக் கூட தவறவிடக்கூடாது. வாக்காளர் பட்டியலை, அடிக்கடி சரி பார்க்க வேண்டும். ஏனென்றால், பா.ஜ.க. வட மாநிலங்களில் பல தில்லுமுல்லுகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

### மீண்டும் கழகம் ஆட்சி

இன்று நான் சோழவந்தான் தொகுதியில் பேசிவிட்டு, நாளை வேறு தொகுதிக்கு சென்று விடுவேன். ஆனால், இங்கு வந்திருக்கின்ற நீங்கள், அடுத்த ஆறு மாதம் இந்தத் தொகுதியில் இருந்து பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை உங்களிடம் இருக்கிறது. அதை நிச்சயம் நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வர வேண்டும், நம் முதலமைச்சர் நாற்காலியில், உட்கார வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் நாம் அனைவரும் உழைக்க வேண்டும். அதை நாம் இன்றைக்கு உறுதிமொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, மாவட்டக் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணி, சேகர், பி.எம்.எஸ்.ஸ்ரீதர், தொகுதிப் பார்வையாளர் சுபாஷ் சம்பத், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தன்ராஜ், அருண்குமார், முத்தையன், பரந்தாமன், பால ராஜேந்திரன், பசும்பொன் மாறன், தனசேகர், பேரூர் கழகச் செயலாளர்கள் பால்பாண்டியன், சத்தியபிரகாஷ், ரகுபதி, மனோகர், வேல்பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இளங்கோ, ரேணுகா ஈஸ்வரி, கோகுல்நாத், முருகன், கார்த்திக், முரளிதரன், கழக இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் வெற்றிச்செல்வன், ஐயப்பன், குமரேசன், மருதராஜா, அன்புச்செல்வன், வன்னிமுத்துப் பாண்டி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

## மதுரையில் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பைப் போட்டி!
## கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதல்வர் பதில்!

**சுந்தரபாண்டியன், வாடிப்பட்டி பேரூர்:**

**சோழவந்தான் தொகுதியில் அரசு கலைக்கல்லூரி அமைத்துத் தரப்படுமா?**

**துணை முதலமைச்சர்:** நம் அரசு கல்விக்காக தொடர்ந்து பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இந்தக் கோரிக்கையை நிச்சயம் நம் தலைவரிடத்தில் கொண்டு சேர்த்து, உங்களின் கோரிக்கையை நம் தலைவர் அவர்கள் நிறைவேற்றித் தருவார் என்பதை கூறிக்கொள்கிறேன்.

**பி.ஏ.மயில்வாகனன், அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியம்:**

**நம் அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக கிராமங்கள், நகரங்கள்தோறும் விளக்கப் படங்களை திரையிட்டு, மக்களைத் திரட்டி பொதுக்கூட்டம் நடத்தலாமே?**

**துணை முதலமைச்சர்:** கழக மாவட்டம் வாரியாக நலத்திட்டங்கள் மக்களிடம் சென்றுள்ளதை விளக்கி பொதுக்கூட்டங்கள் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்போதுகூட முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தை, தமிழ்நாடு முழுவதும் நடத்திக்கொண்டு இருக்கிறோம். `ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை நம் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட 2 கோடி உறுப்பினர்களை நம் இயக்கத்தில் சேர்த்து இருக்கிறோம். அதற்காக ஒவ்வொரு வீடாக ஏறி, இறங்கி மக்களை சந்தித்து உறுப்பினர்களாகச் சேர்த்து அந்த முன்னெடுப்பை நீங்கள் வெற்றி பெறச் செய்துள்ளீர்கள். எனவே மக்களைச் சந்திக்கும் எந்தவொரு முயற்சியும் நாம் மேற்கொள்ள வேண்டியதே. அந்த வகையில், விளக்கப் படங்களை திரையிட்டு, கூட்டங்களை நடத்தவும் நாம் முயற்சிகளை எடுப்போம்.

**சௌந்தரபாண்டியன், சோழவந்தான் ஒன்றியம்:**

**இளம் பெண்களை அதிகமாக கழகத்தில் இணைத்து, தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்...**

**துணை முதலமைச்சர்:** இந்த அரசே, மகளிருக்கான அரசாகத்தான் அமைந்திருக்கிறது. மகளிருக்கு விடியல் பயண திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் என்று பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்கள். `ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பில் இணைந்த அனைத்து மகளிர்களையும் கழகப் பணியில் ஈடுபடுத்தி, கழகத்துக்கு மகளிர் ஆதரவு பெருமளவில் உள்ளதை ஒவ்வொரு வட்ட, கிளைக் கழகச் செயலாளர்களும் நிரூபிக்க வேண்டும்.

**இராஜேந்திரன், வாடிப்பட்டி வடக்கு ஒன்றியம்:**

**சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் மாதம் ஒருமுறை சென்று, மக்கள் குறைகளைக் கேட்டறிந்து, அதற்கு தீர்வு வழங்க உத்தரவிட வேண்டும்.**

**துணை முதலமைச்சர்:** சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, இனிமேல் அனைத்து கழக நிர்வாகிகளும் மக்களிடம் சென்று, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, அதை தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். நம் சாதனைகளை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அடுத்த ஆறு மாதங்களுக்கு கழக நிர்வாகிகளும் தினந்தோறும் மக்களைச் சந்தித்து, தொகுதிக்கு என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**எம்.முரளி, வாடிப்பட்டி பேரூர்:**

**ஆண்டுக்கு ஒரு முறையாவது, நீங்கள் சோழவந்தான் தொகுதிக்கு வரவேண்டும்...**

**துணை முதலமைச்சர்:** நான் சோழவந்தான் தொகுதிக்கு வருவது இது முதல்முறை கிடையாது. பலமுறை வந்திருக்கிறேன். சென்ற வருடம், மாநில மாநாட்டிற்காக நடத்திய செயல்வீரர் கூட்டத்துக்கு வந்திருக்கிறேன். இனியும் பலமுறை இந்த சோழவந்தான் தொகுதிக்கு வருவேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நம் தலைவர் அவர்கள் சென்னையில், ஒவ்வொரு தொகுதி நிர்வாகிகளையும் 'உடன்பிறப்பே வா' என்ற முன்னெடுப்பின் மூலமாக வரவழைத்து, ஒரு மணி நேரம் செலவழித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டு வருகிறார். என்னை, `நீ ஒவ்வொரு தொகுதியாக சென்று கழக நிர்வாகிகளை சந்தித்து பேசிவிட்டு வா' என்று கழகத் தலைவர் அனுப்பி வைத்துள்ளார். எனவே, தமிழ்நாடு முழுவதும் நான் செல்கிறேன். உங்களின் வாழ்த்துகளுடன் தொடங்கிய இந்தப் பயணம், வெற்றிப் பயணமாக அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**மு.பால்பாண்டியன், வாடிப்பட்டி பேரூர்:**

**ஹாக்கி விளையாட்டில் இந்திய, சர்வதேச அளவில் புகழ்பெற்ற வீரர்கள் வாடிப்பட்டியில் இருந்து வருகிறார்கள். எனவே, ஹாக்கி விளையாட்டை மேம்படுத்த, சிறந்த மைதானம் அமைக்க வேண்டும்.**

**துணை முதலமைச்சர்:** இந்தப் பகுதியில் மைதானம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, சரியான இடத்தைத் தேர்வுசெய்து, மைதானம் அமைப்பதற்கான முயற்சிகளை, விளையாட்டுத்துறையின் மூலமாகச் செய்வேன். இந்த வருடம் தமிழ்நாட்டுக்கு இன்னொரு பெருமை என்னவென்றால், முதல்முறையாக ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஒவ்வொரு முறையும் சென்னையில் நடத்துவோம். ஆனால், இந்த முறை மதுரையில் நடத்த திட்டமிட்டு, மிகப்பெரிய ஹாக்கி மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 29 போட்டிகள் நடைபெற உள்ளன. உலகப் புகழ்பெற்ற வீரர்கள் எல்லாம் வந்து கலந்துகொள்ளப் போகிறார்கள். விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு ஊக்கத்தொகைகளை நம் அரசு வழங்கி வருகிறது. தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக சென்ற வருடம் 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை கொடுத்து இருக்கிறோம். விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் பல்வேறு திட்டங்களைத் தந்துகொண்டு இருக்கிறோம்.

**சுந்தரமகாலிங்கம், வாடிப்பட்டி வடக்கு ஒன்றியம்:**

**பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது சர்க்கரை ஆலையை நவீன அரிசி ஆலையாக மாற்ற வேண்டும்.**

**துணை முதலமைச்சர்:** நிச்சயம் இந்தக் கோரிக்கையை நம் தலைவரிடம் கொண்டு செல்கிறேன். தலைவர் அதை நிறைவேற்றிக் கொடுப்பார் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.